சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **182 / 2020**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.1**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.A.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி 20.11.2025 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : ஜெயசுதா | கிராமம் : |
| க/பெ : | வட்டம் : |
| மதம் : | தொழில்: |
| ஜாதி : | வயது : |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் - ம.சா.ஆ.1

2) பிரேத பரிசோதனை அறிக்கை சான்றிட்ட நகல் - ம.சா.ஆ.2

3) வாரிசு சான்றிதழ் - ம.சா.ஆ.3

4) குற்ற பத்திரிக்கை சான்றிட்ட நகல் - ம.சா.ஆ.4

5) வரைபடம் சான்றிட்ட நகல் - ம.சா.ஆ.5

6) விபின்குமார் ஓட்டுநர் உரிமம் அசல் - ம.சா.ஆ.6. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. இம்மனுவில் மூன்றாவது எதிர்மனுதாரர் எனது கணவர். யாருடைய கவனக்குறைவால் விபத்து நடைபெற்றது என்று எனக்கு நேரடியாக தெரியாது. எனது மகன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதனால் மனுவானது குறைபாடு உடையது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எனது கணவருக்கும், எனக்கும் விவாகரத்து ஆகிவிட்டது. இறந்துபோன எனது மகனுக்கு திருமணம் ஆகவில்லை. எனது மகன் தான் வாகனத்தை ஓட்டத்தெரியாமல் ஓட்டி, முதல் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால்ச ரியல்ல. மேற்படி விபத்திற்கு எனது மகன் தான் காரணம் முதல் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் மீது எவ்வித தவறும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடைபெற்ற இடம் எனக்கு தெரியும். விபத்து நடந்த இடமானது சாலை வளைந்து செல்லக்கூடிய பகுதி என்றால் சரிதான். மேற்படி வளைவு சாலையில் செல்லும் பொழுது தான் வாகனத்தை

கட்டுப்படுத்த இயலாமல் முதல் எதிர்மனுதாரரின் வாகனத்தின் மீது மோதிவிட்டார் என்றால் சரியல்ல. எனது மகன் இறந்துவிட்டதால் எனக்கு ஏதேனும் இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக காவல் துறையினர் முதல் எதிர்மனுதாரர் மீது குற்றவழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றால்சரியல்ல. என்னுடைய மகனின் வயது, தொழில், வருமானம் ஆகியவற்றை நிரூபிக்கக்கூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கோரி பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இரண்டாவது எதிர்மனுதாரரை பொறுத்து மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2025.11.20 17:38:05 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.